**ஜூலை 28**

மனன வசனம்

**நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அப்போஸ்தலர் 9:15.**

ஆராய்ச்சிக்கு

*அப் 26:9-11; உபாகமம் 21:23; அப் 9:1-20; 1கொரிந்தியர் 9:1; கலாத்தியர் 1:1; அப் 9:20-30.*

ஜூலை 28 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 5

# பவுலின் மனமாற்றம்



தர்சுவைச் சேர்ந்த சவுல் மனமாறி, பவுல் என்று அழைக்கப்பட்டார். அப்போஸ்தல சபை வரலாற்றில் மிகமுக்கிய சம்பவங்களில் இதுவும் ஒன்று. சபைக்கு எதிராகச்செயல்பட்டு, பிறகு மெய்யாகவே மனமாறின வர்கள் பலர் உண்டு; எனவே, பவுல் மனமாறியதை விட கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் ஒன்றும் உள்ளது. நற்செய்தி சம்பந்தமாக அவர் செய்துமுடித்த பணிதான் அது. ஆதிகால விசுவாசிகளை பயங்கர மாகத் துன்புறுத்தியவர்; மலர்ந்துவந்த அந்த சபைக்கு அவர் ஏராளமான பாதிப்புகளை உண்டாக்கியிருக்கக் கூடும். சபையை அழிக்கவேண்டுமென்று உறுதியாக வும் இருந்தார்; அதிகாரப்பூர்வமாக உத்தரவும் பெற்றி ருந்தார். ஆனாலும் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில், தேவன் அழைத்தபோது, உண்மையோடு அதற்கு இணங்கினார்; அப்போஸ்தலர்களிலேயே மேன்மை பெற்றவராக மாறினார். ‘கடுங்கசப்போடு, ஈவுஇரக்க மின்றிகிறிஸ்துவின்சபையைஉபத்திரவப்படுத்தினவர் களிலிருந்து, நற்செய்திக்காக உறுதியுடன்நிற்கக்கூடிய, அதை வெற்றிகரமாக அறிவிக்கக்கூடிய ஒருவர் எழும்பினார்.’’ – *EGW, LP, p 9.*

தான் ஆதிகாலச் சபையைத் துன்புறுத்தின செயல் களை நினைத்து, தான் முற்றிலும் அபாத்திரனாக நடந்துகொண்டதாக எப்போதும் பவுல் வருந்தியிருக் கக்கூடும்; ஆனாலும் தேவன் தன்மேல் காட்டிய கிருபை விருதாவாகப் போகவில்லை என்பதை அதைவிட ஆணித்தரமாக அவர் உணர்ந்திருப்பார். பவுல் மன மாறிய நிகழ்வானது கிறிஸ்தவ மார்க்கத்தில் ஒரு நிரந் தர மாற்றத்தை உண்டாக்கியது.

2018, ஆகஸ்ட் 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

ஞாயிறு, ஜூலை 29

## சபையை உபத்திரவப்படுத்தினவர்

பவுல் கிரேக்கமொழி பேசின ஒரு யூதன். சிலிசியாவின் தலைநகரான தர்சுவில் பிறந்தவர். அப் 21:39. ஆனால், எருசலேமில் கமாலியேலின்கீழ் கல்வி கற்றார். அப் 22:3. எனவே, கிரேக்க யூதர்களின் பழக்கவழக்கங்களிலிருந்து ஓர ளவுக்கு மாறுபட்டிருந்தார். அக்காலத்தில் மிகவும் செல்வாக்குமிக்க ஒரு கல்விமான் கமாலியேல். பவுல் பாரம்பரிய நம்பிக்கைகளில் மிகவும் உறுதியாக இருந்தார்; அது கிட்டத்தட்ட மதவெறிபோல மாறியிருந்தது. கலா 1:14. அதனால்தான் ஸ்தேவானைக் கொலைசெய்ய சம்மதித்திருந்தார்; உபத்திரவத்தை முடுக்கிவிட்டதில் முக்கியப் பங்காற்றினார்.

**சபைக்கு எதிராக தான் எவ்வாறெல்லாம் செயல்பட்டதாக பவுல் கூறுகிறார்? அப் 26:9–11.**

சுவிசேஷமானது யூதர்களுக்கு இடறுதலின் கல்லாக இருந்ததாக பவுல் கூறுகிறார். 1கொரி 1:23. மேலும், ராஜாவாகப் போகிற மேசியாவுக்கான எந்த அறிகுறியையும் இயேசுவிடம் யூதர்கள் காணவில்லை. சிலுவையில் மரித்த ஒருவர் மேசியாவாக இருக்கமுடியாதென நினைத்தார்கள். ஏனெனில், தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன் என்று வேதாகமம் கூறுகிறது. உபா 21:23. இயேசுவைப்பற்றி சபை சொல்வது பொய்யென்பதற்கு அவர் சிலுவையில் கோரமாக மரித்தது ஓர் ஆதாரமெனக் கருதினார்கள்.

தர்சுவின் சவுல் விசுவாசிகளை உபத்திரவப்படுத்துகிறார். அப் 9:1,2. எருசலேமுக்கு வடக்கே 135 மைல் தூரத்தில் அமைந்திருந்த ஒரு முக்கியப் பட்டணம் தமஸ்கு; அங்கு யூதர்கள் அதிகமாக வசித்தார்கள். யூதேயாவுக்கு வெளியே வசித்த யூதர்களுடைய தலைமை அமைப்பாகிய சனகெரிம் எருசலேமில் இருந்தது. ஆங்காங்கிருந்த ஜெபாலயங்கள் அங்கங்குள்ள மக்களின் தேவைகளைக் கண்டறிந்து, உதவிசெய்தன. சனகெரிம் சங்கத்தினர் ஒரு **ஷலியா** மூலம் ஒவ்வொரு பகுதியின் மக்களோடும் கடிதத் தொடர்பு வைத்திருந்தார்கள். **ஷலியா** என்றால் ***'அனுப்பப்பட்டவர்'*** என்று அர்த்தம்; இது **ஷலா** (அனுப்பு) என்கிற எபிரெய வார்த்தையிலிருந்து வந்ததாகும். மதரீதியான பல்வேறு செயல்பாடுகளை நிறைவேற்றும்படி சனகெரிம் சங்கத்தின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிதான் **ஷலியா**.

சனகெரிமின் தலைவரான பிரதான ஆசாரியனிடம் தமஸ்குவிலுள்ள ஜெபாலயங்களுக்கு கடிதங்கள் தரும்படி சவுல் கேட்கிறார்; எனவே, இயேசுவைப் பின்பற்றுகிறவர்களைக் கைதுசெய்து, எருசலேமிற்குக் கொண்டுவருகிற அதிகாரமுள்ள ஒரு ஷலியாவாக சவுல் மாறினார். அப் 26:12. ஷலியாவுக்கு இணையான கிரேக்க வார்த்தை அபாஸ்டலோஸ்; அப்போஸ்தலர் என்கிற வார்த்தை இதிலிருந்து வந்ததுதான். எனவே பவுல், இயேசுவின் அப்போஸ்தலனாக மாறுவதற்குமுன் சனகெரிமின் அப்போஸ்தலனாக இருந்தார்.

ஏதாவது ஒரு விஷயத்தில் பக்திவைராக்கியமாக இருந்து, அல்லது அதற்கு எதிராக இருந்து, பின்பு மனம்மாறியிருக்கிறீர்களா? அந்த அனுபவத்திலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக் கொண்டீர்கள்?

## தமஸ்குவுக்குச் செல்லும் வழியில்

**தமஸ்குவிற்குச் சென்றுகொண்டிருந்தபோது பவுலுக்கு என்ன நேர்ந்தது? அப் 9:3–9. இயேசு சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் என்ன? அப் 9:5; அப் 26:14.**

பவுலும் அவரைச் சேர்ந்தவர்களும் தமஸ்குவை நெருங்கிய சமயத்தில், திடீரென வானத்திலிருந்து பிரகாசமான ஓர் ஒளி வீசியது; ஒருவர் பேசுகிற சத்தமும் கேட்டது. இது ஒரு தரிசனம் அல்ல; பிரத்தியேகமாக, பவுலுக்குமட்டுமே கொடுக்கப்பட்ட தேவ வெளிப்பாடு. பவுலோடு இருந்தவர்களும் அந்த வெளிச்சத்தைக் கண்டார்கள்; ஆனால், பவுல் மட்டுமே கண் பார்வை இழந்தார். அவர்களுக்கும் அந்தச் சத்தம் கேட்டது; ஆனால் பவுலுக்கு மட்டுமே அது புரிந்தது. உயிர்த்தெழுந்த இயேசுவின் தெய்வீக மகிமையே அந்த வெளிச்சம்; அவர் தனிப்பட்ட விதத்தில் அப்போது பவுலுக்குத் தரிசனமானார். அப் 22:14. தான் இயேசுவைத் தரிசித்ததையும், பன்னிரு அப்போஸ்தலர்கள்போல அவருடைய உயிர்த்தெழுதலுக்கு ஒரு சாட்சியாக இருப்பதையும், அப்போஸ்தல அதிகாரம் பெற்றிருப்பதையும் பவுல்தானே வலியுறுத்துகிறார். 1கொரி 9:1; 15:8.

அந்த வெளிச்சத்தைவிட, இயேசுவோடு பேசியதே பவுலில் அதிக தாக்கத்தை உண்டாக்கியது. நாசரேத்தின் இயேசுவைப் பின்பற்றினவர்களால் யூத மார்க்கத்திற்கு நேரிட்ட அச்சுறுத்தலை அகற்றுவதற்காக அவர்களை அழிக்க வேண்டுமென்று பவுல் நினைத்திருந்தார். ஆனால் இயேசு உயிரோடிருக்கிறார் என்பதை அறிந்ததும் திகைத்துப்போனார்; அவருடைய விசுவாசிகளைத் தாக்கியதின்மூலம், தான் அவரையே தாக்குவதைப் புரிந்துகொண்டார்.

சவுலிடம் இயேசு ‘முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்’ என்று சொல்லுகிறார். அப் 26:14. இது ஒரு கிரேக்க பழமொழியாக இருக்கலாம். நுகம் சுமத்தப்பட்ட காளைகள் நேராகச் செல்லும்படி கூரான ஒரு கம்பைப் பொருத்தியிருப்பார்கள். காளைகள் எங்காவது வழிவிலகினால், முள் போன்ற கூரான அந்தக் கம்பு குத்திவிடும்.

இயேசு இவ்வாறு சொன்னது, ஸ்தேவான் மரணத்தை பவுலுக்கு ஞாபகப்படுத்தி, வேதனை கொடுத்திருக்கலாம்; இது ஆவியானவரின் கிரியையென வேதாகமம் கூறுகிறது. யோவான் 16:8-11. ‘‘ஸ்தேவானை விசாரித்து, குற்றவாளியெனத் தீர்த்ததில் சவுலுக்கு முக்கியப் பங்கிருந்தது; ஆனால், இரத்தசாட்சியான அவரிடம் தெளிவாகக் காணப்பட்ட தேவபிரசன்னமானது, இயேசுவின் சீடர்களுக்கு எதிராக தான் மேற்கொள்ளும் நடவடிக்கை சரிதானா எனும் கேள்வியை சவுலின் மனதில் எழுப்பியது. குழப்பமடைந்த அவர், ஞானவான்களென்றும் நீதிமான்களென்றும் தான் நம்பியிருந்தவர்களிடம் ஆலோசனை கேட்கிறார். ஆசாரியர்கள் மற்றும் தலைவர்கள் சொன்னவற்றை வைத்து, ஸ்தேவான் தேவதூஷணம் சொன்னவர் என்றும், இரத்தசாட்சியாக மரித்த அவருடைய சீடர்கள் போதித்த கிறிஸ்து ஒரு மோசக்காரர் என்றும், ஆலயப்பணிகளைச் செய்பவர்கள் சொல்வதுதான் சரியென்றும் முற்றிலும் நம்பிவிடுகிறார்.’ - *EGW, AA, p 112,113.*

மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பது எவ்வாறு ஞானமான ஒரு செயலாகும்?

## அனனியா வருகிறார்

தன்னிடம் பேசுவது இயேசு என்று பவுல் உணர்கிறார்; ‘‘ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டும்?’’ என்று கேட்கிறார். அப் 22:10. அந்த வாய்ப்புக்காகத்தான் இயேசு காத்திருந்தார். அதுவரையிலும் தான் செய்துவந்த செயல்களுக்காக பவுல் மனம் வருந்தினார்; அக்கணம்முதல், தேவன் தன் வாழ்வை நடத்த எந்த நிபந்தனையுமின்றி சம்மதித்தார். தமஸ்குவிற்கு அவரை அழைத்துச் சென்றார்கள்; அடுத்து என்ன செய்யவேண்டுமென்கிற கட்டளை வரும்வரை காத்திருந்தார்.

தர்சுவின் சவுல், அப்போஸ்தலனாகிய பவுலாக புதிய வாழ்க்கை வாழும்படி தேவன் அவரை ஆயத்தப்படுத்தின விதத்தை அப் 9:10-19 கூறுகிறது. சவுலைப் பார்த்து, அவர்மேல் கையைவைத்து, அவரைப் பார்வையடையச் செய்யும்படி ஒரு தரிசனத்தில் அனனியாவிடம் இயேசு கூறுகிறார். சவுல் யாரென்று அனனியாவுக்குத் தெரியும்; அவர்நிமித்தம் சகோதரர்கள் பலர் உபத்திரவத்திற்குள்ளாகி, கொலைசெய்யப்பட்டதையும் அறிந்திருந்தார். சவுல் தமஸ்குவிற்கு வந்த காரணம்பற்றியும் அனனியா கேள்விப்பட்டிருந்தார்; தான் முதல் பலியாக மாற அவர் விரும்பவில்லை. அதனால்தான் அவர் தயங்கினார்.

சவுல் தனிப்பட்ட விதத்தில் இயேசுவைச் சந்தித்ததும், அது அவருடைய வாழ்க்கையில் நிரந்தர மாற்றத்தை உண்டாக்கியதும் அனனியாவுக்குத் தெரியாது. சவுல் இப்போது சனகெரிம் பணியாள் அல்ல. இயேசுவுக்காக வேலை செய்யும்படி இயேசுவின் அழைப்பை சற்றுமுன்தான் பெற்றிருந்தார். சனகெரிம் அப்போஸ்தலனாக இருந்தவரை, யூதருக்கும் புறஜாதியாருக்கும் நற்செய்தியை அறிவிக்கும் கருவியாக இயேசு தெரிந்துகொண்டிருந்தார்.

**அப்போஸ்தல ஊழியத்தில் பவுல் என்ன உரிமைகோருகிறார்? கலா 1:1,11,12.**

---

நற்செய்தியையும் அப்போஸ்தல ஊழியத்தையும் எந்த மனிதனிடமிருந்தும் அல்ல, நேரடியாக இயேது கிறிஸ்துவிடமிருந்து தான் பெற்றதாக கலாத்தியரில் பவுல் கூறுகிறார். அதற்காக, பவுலின் அழைப்பில் அனனியா ஆற்றிய பங்கை நாம் மறுக்கமுடியாது. தமஸ்குவிற்கு வரும் வழியில் இயேசுவிடமிருந்து சவுல் பெற்றுக்கொண்ட ஊழியக்கட்டளையை அனனியா உறுதிப்படுத்துகிறார்.

சவுலின் வாழ்க்கை தலைகீழாக மாறியது எந்த மனிதனுடைய முயற்சியாலும் அல்ல. இயேசுவைக் கடுமையாக எதிர்த்த ஒருவர் திடீரென அவரை தன் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டதற்கும், தன்னுடைய நம்பிக்கைகள்-புகழ்-பணி என அனைத்தையும் விட்டுவிட்டு, அவருடைய திறமையான அப்போஸ்தலனாக மாறியதற்கும் தேவனுடைய தலையீடுமட்டுமே காரணமாகும்.

தேவனுடைய அற்புத கிருபையின் செயல்பாட்டை சவுல் மனமாறிய அனுபவத்தில் எவ்வாறு காண முடிகிறது? ‘இவரெல்லாம் மாறி, மெய்யான விசுவாசத்திற்கு வருவது சாத்தியமா?’ என்று யாரை யாவதுபற்றி நினைத்திருக்கிறீர்களா? பவுலின் அனுபவத்திலிருந்துஎன்னகற்றுக்கொள்ளலாம்?

## பவுல் ஊழியத்தை ஆரம்பிக்கிறார்

மனமாறிய பவுல், உடனே எருசலேமிற்குத் திரும்பாமல், சில காலம் தமஸ்குவில் இருந்திருக்க வேண்டும் என்பது புரிகிறது. அப் 9:19-26. எருசலேமிற்குச் செல்வதற்குமுன்பாக பவுல் அரேபியாவுக்குச் சென்று, அங்கே சில காலம் தனிமையாக வாழ்ந்திருக்கிறார். கலா 1:17. 'அங்கே, பாலைவனத்தில் தனிமையாக, இடையூறின்றி வார்த்தையை ஆராய்ந்து, தியானிக்க பவுலுக்கு அருமையான வாய்ப்பு கிடைத்தது.' - *EGW, AA, p 125.*

**தமஸ்குவில் பவுல் செய்த ஊழியம்பற்றி லூக்கா என்ன சொல்கிறார்? அப் 9: 20–25. எவ்வளவு தூரம் அது வெற்றிகரமாக அமைந்தது?**

---

---

தமஸ்குவில் ஜெபாலயங்களில் தஞ்சமடைந்திருக்கக்கூடிய யூத விசுவாசிகளைக் குறிவைத்துதான் எருசலேமிலிருந்து பிரதான ஆசாரியனிடம் நிருபங்களைப் பெற்றுக்கொண்டு பவுல் கிளம்பியிருக்கக்கூடும். அப் 9:2. ஆனால், அரேபியாவிலிருந்து திரும்பியவர் நேராக அந்த ஜெபாலயங்களுக்குச் செல்கிறார்; விசுவாசிகளைக் கைதுசெய்வதற்காக அல்ல; அவர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டுவதற்காக; இயேசுவை மோசக்காரரெனத் திட்டுவதற்காக அல்ல; அவரே இஸ்ரவேலின் மேசியாவெனச் சொல்வதற்காக. தங்களை உபத்திரவப்படுத்தப் போகிறவரென நினைத்திருந்த ஒருவர் அப்படிச் செய்யாமல், இயேசுவைப்பற்றிச் சொல்வதைக் கேட்டதும் அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? சவுலுடைய மாற்றத்தையும், சபைக்காக அவர் செய்த ஊழியத்தையும் கண்டு ஆச்சரியப்படாமல் இருந்திருக்க முடியுமா? திடீரென அவர் மனமாறியதற்கு என்ன காரணமென அவர்களுக்குப் புரியாமல் இருந்திருக்கலாம்!

பவுலிடம் எதிர்பேசமுடியாத எதிரிகளில் சிலர், அவரைக் கொல்லத் திட்டமிட்டார்கள். உள்ளூர் அதிகாரிகளிடம் அவரைக் கைதுசெய்யக் கோரினார்கள். 2கொரி 11:32,33. ஆனால் விசுவாசிகள் ஒரு கூடையில் வைத்து, பவுலைத் தப்புவிக்கிறார்கள்; பட்டணத்தின் சுவரோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டின் சன்னல்வழியாக அவரை இறக்கிவிட் டிருக்கலாம்.

தனக்கு எதிர்ப்புகள் உண்டாகும் என்பதை ஆரம்பம் முதலே பவுல் அறிந்திருந்தார். அப் 9:16. அவருடைய ஊழியத்தில் பல வகையில் எதிர்ப்பும் உபத்திரவமும் பாடுகளும் நேரிட்டுக் கொண்டே இருந்தன; கிறிஸ்துவில் புதிய வாழ்க்கையை வாழ ஆரம்பித்தபின், ஒவ்வொரு கணமும் சோதனைகளும் பாடுகளும் உண்டாயின; ஆனாலும், அவருடைய விசுவாசத்தையும் ஊழிய சிந்தையையும் எதுவாலும் அசைக்கமுடியவில்லை. 2கொரி 4:8,9.

போராட்டங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பவுல் பின்வாங்கவில்லை. நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படும்போதும், அதாவது அதைரியமும் எதிர்ப்பும் உண்டாகும்போதும் நம் விசுவாசத்தில் உறுதியாக இருக்க நாம் என்ன செய்யலாம்?

வியாழன், ஆகஸ்ட் 2

## எருசலேமுக்குத் திரும்புதல்

உபத்திரவக்காரனாயிருந்து மனந்திருந்திய பவுல், தமஸ்குவிலிருந்து தப்பித்து, முதல்முறையாக எருசலேமுக்குத் திரும்புகிறார். அதாவது, அவர் மன மாறி மூன்று வருடங்கள் கழித்து வருகிறார். கலா 1:18. சபைக்கு உள்ளேயும் வெளியேயும் அவருக்குப் பிரச்சனைகள் எழும்பியது குறிப்பிடத்தக்கது.

**எருசலேமுக்குச் சென்றபிறகு, பவுலுக்கு என்ன நிகழ்ந்தது? அப் 9:26–30.**

---

---

எருசலேமில் சீஷர்களோடு சேர்ந்துகொள்ள பவுல் முயல்கிறார். ஒரு கிறிஸ்தவராக அவர் மாறி, மூன்று வருடங்கள் ஆகியிருந்தன. அனனியா முதலில் சந்தேகப்பட்டதுபோல, அப்போஸ்தலர்களும் சந்தேகப்படுமளவிற்கு அவருடைய மனமாற்றம் நம்பமுடியாததாக இருந்தது. அது ஒரு திட்டமிட்ட நாடகமோ என்று பயந்தார்கள். சீப்புருத்தீவைச் சேர்ந்த லேவியரும், கிரேக்க மொழி பேசியவருமான பர்னபா என்பவர்தான் அப்போஸ்தலர்களுடைய பயத்தைப் போக்கி, பவுலை அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார். அப் 4:36,37. பவுல் மெய்யாகவே மனமாறியதை அறிந்த அவர்கள், தேவனுடைய செயலால் அதிசயித்திருப்பார்கள்.

ஆனால் பவுலுக்கு எதிர்ப்பு முற்றிலுமாக நீங்கிவிடவில்லை; முன்பு அவர் சபையை உபத்திரவப்படுத்தினவர் என்பதால் அல்ல; அவர் பிரசங்கித்துவந்த நற்செய்தியால் எதிர்ப்பு கிளம்பியது. இரட்சிப்பு ஒவ்வாருவருக்கும் உரியது என்பதை யூத விசுவாசிகளால் உடனே புரிந்துகொள்ள முடியவில்லை; மேலும், பழைய ஏற்பாட்டு சடங்காச்சார முறைமைகளை அடிப்படையாக வைத்து விசுவாசம் இருக்கக்கூடாது; இயேசு சிலுவையில் மரித்ததுமே அவை அவசியம் இல்லாமல் ஆகிவிட்டன என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. யூதேய சபையில் பவுலுக்கு நெருக்கமாக இருந்த விசுவாசிகள் எல்லாருமே கிரேக்க மொழி பேசின யூதர்கள். பர்னபா, ஏழு பேரில் ஒருவரான பிலிப்பு, சீப்புரு தீவைச் சேர்ந்த மினாசோன் போன்றோர் அதில் உண்டு. அப் 21:8,16. பல வருடங்கள் சென்ற நிலையிலும், ஸ்தேவான் பிரசங்கித்த அதே உபதேசத்தையே பவுல் பிரசங்கிப்பதாக எருசலேமின் சபைத்தலைவர்கள் பவுல்மேல் குற்றஞ் சாட்டினார்கள். அப் 21:21.

எருசலேமில் பதினைந்து நாட்கள் பவுல் தங்கியிருந்தார். கலா 1:18. ஸ்தேவானைக் கொல்வதற்கு, தான் தூண்டிவிட்ட அதே அவிசுவாச யூதர்களிடம் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ள அப்போது தீர்மானித்தார். ஸ்தேவானை எதிர்த்ததுபோலவே பவுலையும் அங்கிருந்தவர்கள் எதிர்த்தார்கள்; அவரைக் கொலை செய்ய நினைத்தார்கள். எருசலேமிலிருந்து தப்பித்துச் செல்லும்படி ஒரு தரிசனத்தில் இயேசு அவரை எச்சரித்தார். அப் 22:17-21. சகோதரரின் உதவியுடன் துறைமுக நகரமான சிசெராவுக்குச் சென்றார், அங்கிருந்து சிலிசியாவிலிருந்த தன் சொந்த பட்டணத்திற்குச் சென்றார். அங்கு அவர் பல வருடங்கள் தங்கியிருந்தார்; பிறகுதான் தன் ஊழியப் பயணங்களை ஆரம்பிக்கிறார்.

## மேலும் படிக்க:

வெள்ளி, ஆகஸ்ட் 3

'யுத்தத்தில் தளபதி கொல்லப்பட்டால், அது அவனுடைய படைக்கு இழப்பு; எதிரிப் படைக்கு அது கூடுதல் பெலம் அல்ல. ஆனால், திறமையான ஒருவர் எதிரியின் படையில் சேர்ந்துவிட்டால், இந்தப் படைக்கு இழப்பு; அவர் சேர்கின்ற படைக்கு நிச்சயம் அனுகூலம். தமஸ்குவுக்குச் சென்ற தர்சுவின் சவுலை ஆண்டவர் எளிதில் கொன்றிருக்கலாம்; உபத்திரவம்கொடுத்துவந்தவர்கள் வெகுவாகப் பெலமிழந்து போயிருப்பார்கள். ஆனால், தேவனோ தமது முன்யோசனையின்படி, சவுலின் உயிரை எடுக்காமல், அவர் மனம்மாறும்படி செய்தார். சத்துருவின் வீரன் ஒருவனை, கிறிஸ்துவின் வீரனாக அது மாற்றியது.'' – *EGW, AA, p 124.*

'புறப்பட்டு போய், சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கும்படி கிறிஸ்து தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டார்; ஆனால் இதற்குமுன் யூதர்களிடமிருந்து தாங்கள் கேட்டிருந்த உபதேசங்களால், தங்கள் எஜமான் சொன்னவற்றின் அர்த்தத்தை முற்றிலும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை; மந்தமாகவே செயல்பட்டார்கள். தங்களை ஆபிரகாமின் புத்திரர் என்று சொல்லி, தேவ வாக்குறுதியின் சுதந்திரர்களாக கருதினார்கள். ஆண்டவர் பரலோகம் சென்று பல வருடங்களுக்குப் பிறகுதான், கிறிஸ்து சொன்னவற்றின் நோக்கத்தைப் புரியுமளவிற்கு மனவிருத்தியடைந்தார்கள்; அதாவது, யூதர்கள் மனமாறவும், புறஜாதியார் மனமாறவும் தாங்கள் பாடுபடவேண்டுமெனப் புரிந்துகொண்டார்கள்.' – *EGW, LP, p 38.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?' என்று பவுலிடம் ஆண்டவர் கேட்டது பற்றித் தியானியுங்கள். அப் 9:4. நாசரேத்தின் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார் என்று பவுல் உடனே புரிந்துகொண்டார். இயேசுவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள ஆவிக்குரிய உறவைப் புரிந்துகொள்ளவும் அது உதவியாக இருந்தது. மத் 25:34-35. அதாவது, சபைக்குச் செய்யப்படுகிற எந்தத் தீங்கும் இயேசுவுக்கே செய்யப்படுவதாகும். நடைமுறை வாழ்க்கையில் இது எவ்வாறு விசுவாசிகளுக்கு இன்று பொருந்தும்?*

2. *இயேசுவைச் சாட்சியாக அறிவிப்பதில், அவருக்காகப் பாடுபடுவதும் அடங்கும். 'சாட்சி' என்பதற்கான கிரேக்க வார்த்தை* **மார்ட்டர்**. *இதிலிருந்துதான் இரத்த சாட்சியாக மரித்தல் என்பதற்கான ஆங்கில வார்த்தையான மார்ட்டர்டம் உருவானது. இயேசுவுக்காகப் பாடுபடுவது என்றால் என்ன?*

3. *'நான் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நம்புகிறேன்' என்று ஒரு இலத்தீன் பழமொழி உண்டு. சவுலுக்கு நிகழ்ந்ததைப் புரிந்துகொள்ள இந்தப் பழமொழி எவ்வாறு உதவியாக இருக்கும்? பவுல் மனந்திருந்துவதற்குமுன், இயேசுவை விசுவாசித்ததற்குமுன் அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. மனமாற்ற அனுபவத்திற்கு பிறகுதான் அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. நமக்குத் தெளிவாகப் புரிந்திருக்கும் சத்தியங்களைப் புரிந்துகொள்ளாதவர்கள்மேல் நமக்கு எரிச்சல் உண்டாகும்போது, இந்த அனுபவம் எவ்வாறு நமக்கு உதவியாக இருக்கக்கூடும்?*